Register No. | | | | | | | | |

**TA2A**

**5984–24**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2024.

(Three-year Regular Course)

First Year – Second Semester

LAW OF CONTRACTS – II

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Distinguish between a Sub-agent and Substituted agent. State also the modes in which the relationship of an agent and principal be terminated?

   துணை முகவருக்கும் மாற்று முகவருக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக. ஒரு முகவருக்கும் முதல்வருக்கும் உள்ள தொடர்பானது எவ்வகை முறைகளில் முடிவுறலாம் என்பதினை விளக்குக.

2. Explain the terms Complaint, Complainant, Consumer, Service, Defects, Deficiency in service and appeal procedure under the Consumer Protection Act?

   நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் புகார், புகார்தாரர், நுகர்வோர், சேவை, குறைகள், சேவை பணிக் குறைவு மற்றும் மேல் முறையீட்டிற்குண்டான நடைமுறைகளை விளக்குக.

3. What are the rights of surety against the Creditor, Co-sureties and Principal debtor?

   கடன் கொடுத்தவர், உடன் பிணையாளர் மற்றும் முதன்மை கடனாளர் அவர்களுக்கு எதிராக உள்ள பிணையாளரின் உரிமைகள் என்ன என்பதினை விவரி.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the rights and duties of the Pawnor and Pawnee.

   அடகு வைப்பவர் மற்றும் அடகு வாங்குபவரின் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றி விவரி.

5. Discuss the various circumstances in which the court can direct dissolution of a partnership firm.

நீதிமன்றம் கூட்டாண்மை நிறுவனத்தினை கலைக்க உத்திரவிடும் பல்வேறு வழிமுறைகள் பற்றி விவாதிக்கவும்.

6. Define bailment. Enumerate the rights and duties of bailor and bailee.

ஒப்படைவு பற்றி விவாதிக்க. ஒப்படைவு பெறுபவர் மற்றும் ஒப்படைவு அளிப்பவரின் உரிமைகளும் மற்றும் கடமைகளும் பற்றி விவரி.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக:

(a) Procedure for registration of a firm
நிறுவனத்தினை பதிவு செய்வதற்குண்டான நடைமுறை

(b) Distinction between Sale and Bailment
விற்பனை மற்றும் ஒப்படைவிற்குள்ள வேறுபாடு

(c) Unfair Trade Practice
முறையற்ற வணிகப் பழக்கம்

(d) Contract of Indemnity
ஈட்டுறுதி ஒப்பந்தம்

(e) Kaliaperumal v. Visalatchi
கலியபெருமாள் எதிர் விசாலாட்சி

(f) Implied conditions
உட்கிடை கட்டுறுதிகள்

(g) Undisclosed principal
வெளிப்படுத்தப்படாத முதல்வர்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' lends his car to 'B' for a drive to be driven by 'B' only. 'B' allows his daughter 'C' who is an expert in driving all types of car, to drive the vehicle. 'C' drives carefully but it's axle suddenly breaks and the car is damaged. Is 'B' liable for the damage? Discuss.

'அ' என்பவர் தமது வாகனத்தினை 'ஆ' என்பவருக்கு மட்டும் ஓட்டுவதற்கு கொடுக்கிறார். 'ஆ' அவருடைய மகளான 'இ' என்பவர் அனைத்து வகையான வாகனங்களை இயக்குவதில் வல்லவர் என்பதால் அவரை அவ்வாகனத்தினை ஓட்ட அனுமதிக்கிறார். 'இ' மிகவும் கவனமாக ஓட்டுகையில் இதன் அச்சாணி திடீரென பழுதடைந்து வாகனம் சேதாரமாகிவிட்டது. இச்சூழ்நிலையில் 'ஆ' என்பவர் இச்சேதாரத்திற்கு பொறுப்பாவாரா? விவாதிக்க.

9. Shalini who owes Rs. 2,00,000/ (Two lakhs) to Shrinidhi appoints her as an agent to sell her landed property at Madurai. Shrinidhi has also been instructed to appropriate what is due to her and hand over the balance to Shalini. Can Shalini revoke the agreement entered between them? Discuss.

ஷாலினி என்பவர் ஸ்ரீநிதிக்கு ரூ. 2,00,000/ (இரண்டு லட்சம்) தரவேண்டிய சூழ்நிலையில் அவரை முகவராக நியமித்து மதுரையிலுள்ள நிலச் சொத்தினை விற்கப் பணிக்கப்படுகிறார். ஸ்ரீநிதி அச்சொத்துக்களை விற்று, அதிலிருந்து பெறப்படும் தொகையில் அவருக்கு செலுத்த வேண்டிய தொகையினை எடுத்துக்கொண்டு மீதத் தொகையினை ஷாலினியிடம் ஒப்படைக்க வேண்டி அறிவுறுத்தப்படுகிறார். ஷாலினிக்கும் மற்றும் ஸ்ரீநிதிக்கும் ஏற்பட்ட இவ்வொப்பந்தத்தினை இரத்து செய்ய இயலுமா? விவாதிக்க.

10. 'Y' purchased certain wrist watch from an auctioneer on the basis of the description given by the auctioneer that it belonged to the $10^{th}$ century. After purchasing, 'Y' did found that it actually belonged to $18^{th}$ century. 'Y' approaches the court. Will he succeed in the case? Advise.

'Y' என்பவர் ஒரு ஏல விற்பனையாளரிடமிருந்து அவரது கூற்றின்படி 10ம் நூற்றாண்டை சார்ந்த கைக்கடிகாரம் என்று அவர் கூறியதன் பேரில் விலைக்கு வாங்கினார். பின்னர் இக்கைகடிகாரமானது 18ம் நூற்றாண்டினை சார்ந்தது என தெரியவந்த பிறகு நீதிமன்றத்தினை நாடி வழக்கு தாக்கல் செய்கிறார். இவ்வழக்கில் அவர் வெற்றியடைவாரா? அறிவுறுத்துக.

---

Register No. | | | | | | | | |

**TA2B**

**6027–24**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2024.

(Three-year Regular Course)

First Year – Second Semester

PROPERTY LAW

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Elucidate the salient features of gift. When can a gift be suspended or revoked?

   கொடையின் முக்கியக் கூறுகளை எடுத்தியம்புக. எப்பொழுது கொடையை இடைநீக்கம் செய்யவோ அல்லது மறுதலிக்கவோ இயலும்?

2. Explain the procedure for transferring property to an unborn person.

   பிறக்காத குழந்தைக்கு சொத்துரிமை மாற்றம் செய்வதற்கான நடைமுறைகளை விளக்குக.

3. Define Mortgage. Once a mortgage always a mortgage and nothing but mortgage – Discuss.

   அடைமானம் என்பதை வரையறு. அடைமானம் என்பது அடைமானமே தவிர வேறொன்றுமில்லை – விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What are the rights and liabilities of a seller before and after the completion of sale?

   விற்பனைக்கு முன்பும் பின்பும் விற்பவரின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் என்னென்ன?

5. Discuss the principles of doctrine of marshalling.

   பிணையங்களை ஒழுங்குபட இணைவுறுத்தல் கொள்கையைப் பற்றி விவாதிக்கவும்.

6. Explain the various methods by which lease comes to an end.

குத்தகை முடிவடையும் பல்வேறு முறைகளைக் கூறி விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Licence

உரிமம்

(b) Profit a prendre

மற்றவர் நிலத்திலிருந்து பயனடைதல்

(c) Dominant heritage

ஓங்கு சொத்து

(d) Marshall vs Green

மார்ஷல் எதிர் கிரீன்

(e) Essentials of a simple mortgage

எளிய முறை அடைமானத்தின் முக்கியக் கூறுகள்

(f) Doctrine of Accumulation

வருவாய் குவித்தல் கோட்பாடு

(g) Benami transaction.

போலிச் சொத்துரிமை மாற்றம்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Sathish makes a gift to Ramesh, Raja and Kumar. Ramesh and Raja accept the gift and Kumar did not accept. What is the validity of the gift?

சதீஷ் என்பவர் இரமேஷ், இராஜா மற்றும் குமார் என்பவர்களுக்கு கொடை வழங்குகிறார். இதில் இரமேஷ் மற்றும் இராஜா கொடையை ஏற்பு செய்துள்ளார்கள். ஆனால் குமார் கொடையை ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த கொடையின் செல்லும் தன்மையை முடிவு செய்க.

9. Sekar and Muni are two brothers. They partitioned their property. The partition deed provides that the property allotted to each party could be sold only to the other brother. Is the condition valid?

சேகர் மற்றும் முனி இருவரும் உடன் பிறந்தவர்கள். அவர்கள் சொத்தை பாகப்பிரிவினை செய்து கொண்டனர். ஒவ்வொருவருக்கும் ஒதுக்கப்பட்ட சொத்தை மற்ற உடன்பிறந்தவருக்குத் தான் விற்க வேண்டும் எனப் பாகப் பிரிவினை ஆவணத்தில் சொல்லப்பட்டிருந்தது. அந்த நிபந்தனை செல்லுமா?

10. Kavi agrees to sell a house to Moni and puts Moni in possession. Before the sale deed is executed, Kavi's title is found to be defective. What are Moni's remedy and rights? Decide.

கவி வீட்டை மோனி என்வருக்கு விற்பதாக உடன்பட்டு வீட்டின் உடைமையை மோனிக்கு அளிக்கிறார். இந்நிலையில் விற்பனை பத்திரம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னரே கவி அவர்களின் பெயரில் உள்ள வீட்டின் உரிமை பத்திரத்தில் குறைபாடு உள்ளதாக கண்டறியப்பட்டது. மோனிக்கு உள்ள தீர்வு என்ன மற்றும் உரிமைகள் என்ன? தீர்மானி.

---

Register No. | | | | | | | | |

**TA2C**

**5985–24**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2024.

(Three – year Regular Course)

First Year – Second Semester

CONSTITUTIONAL LAW – I

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Examine the salient features of the Constitution of India.

   இந்திய அரசமைப்பின் சிறப்பியல்புகளை பற்றி கூர்ந்தாராய்க.

2. Explain the wide interpretation of fundamental right to life and personal liberty under the Constitution of India with reference to decided cases.

   இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் வாழ்வதற்கான அடிப்படை உரிமை மற்றும் தனிப்பட்ட சுதந்திரம் பற்றிய பரந்த விளக்கங்களைத் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி விளக்கவும்.

3. Directive Principles of State Policy is not only fundamental in the governance of the country, but also a charter of social reformation. Describe.

   அரசுக் கொள்கையினை நெறிப்படுத்தும் கோட்பாடுகள் நாட்டின் நிர்வாகத்தில் அடிப்படை மட்டுமல்ல, சமூக சீர்திருத்த சாசனமாகவும் உள்ளது. விவரிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Define 'State' as described under Article 12 of the Constitution of India.

   இந்திய அரசமைப்பின் 12-வது ஷரத்தின் கீழ் விவரிக்கப்பட்டுள்ள படி 'அரசு' என்பதை வரையறுக்கவும்.

5. Explain the scope of rights against exploitation contained in the Constitution of India.

   இந்திய அரசமைப்பில் உள்ள சுரண்டலுக்கு எதிரான உரிமையின் நோக்கத்தை விளக்கவும்.

6. Explain the constitutional safeguards provided against arbitrary arrest and detention.

தன்னிச்சையான கைது மற்றும் தடுப்புக்காவலுக்கு எதிராக வழங்கப்பட்டுள்ள அரசமைப்பு பாதுகாப்புகளை விளக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Secularism

மதச்சார்பின்மை

(b) Doctrine of Eclipse

தற்கால ஆற்றல் மறைத்தல் கோட்பாடு

(c) Article 16

ஷரத்து 16

(d) Writ of Habeas Corpus

ஆட்கொணர்வு மனு

(e) Equal Pay for Equal work

சமபணிக்கு சம ஊதியம்

(f) Public Interest Litigation

பொதுநல வழக்கு

(g) M.C. Mehta v. State of Tamil Nadu

எம்.சி. மேத்தா எதிர் தமிழ்நாடு மாநிலம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. "No government servant shall participate in any demonstration or resort to any form of strike in connection with any matter pertaining to his conditions of service". Examine the validity of this government order.

அரசு ஊழியர் எவரும் தங்கள் வேலை நிலைமைகள் பொருட்டு எவ்வித ஆர்ப்பாட்டத்திலோ அல்லது வேலை நிறுத்தத்திலோ ஈடுபடுதல் கூடாது. அவ்வரசாணையின் செல்லும் நிலையினை ஆராய்க.

9. Mr. A's marriage was decided with 'B'. In the meantime, he was tested and confirmed HIV positive. The hospital authorities disclosed this information to 'B' and her family. Thereby, the marriage was called off. Mr. 'A' failed a case against the hospital authorities for the violation of his fundamental right to privacy. Decide.

திரு. 'A'-வின் திருமணம் 'B' உடன் முடிவு செய்யப்பட்டது. இதற்கிடையில், அவருக்கு பரிசோதனை செய்யப்பட்டு எச்.ஐ.வி இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. மருத்துவமனை நிர்வாகம் இந்தத் தகவலை 'B' மற்றும் அவரது குடும்பத்தினரிடம் தெரிவித்ததால் திருமணம் நிறுத்தப்பட்டது. 'A', தனது தனியுரிமைக்கான அடிப்படை உரிமையை மீறியதற்காக மருத்துவமனை அதிகாரிகளுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்தார். முடிவு செய்க.

10. 'D', a Hindu male was married to 'B'. Later, he married 'Z', a Muslim woman after converting to Islam without dissolving his first marriage. 'B', filed a case for bigamy against 'D'. Decide.

'D', ஒரு இந்து ஆண் 'B' என்பவரை திருமணம் செய்தார். பின்னர் அவர் தனது முதல் திருமணத்தை முறித்துக் கொள்ளாமல் இஸ்லாத்திற்கு மாறிய பின்னர், 'Z' என்ற முஸ்லீம் பெண்ணை மணந்தார். இந்தத் திருமணத்திற்கு எதிராக 'B' இருமனைவியர் மணம் குற்றத்திற்காக 'D' மீது வழக்கு பதிவு செய்தார். முடிவு செய்க.

---

Register No. | | | | | | | | |

# TA2D

5986–24

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2024.

(Three–year Regular Course)

First Year – Second Semester

FAMILY LAW – II

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

## PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What is meant by partition according to the Mitakshara Law? Explain how a partition is effected and state when can partition be reopened.

   மிதாக்ஷரா சட்டப்படி பாகப் பிரிவினை என்றால் என்ன? பாகப் பிரிவினை எவ்வாறு செய்யப்படுகிறது என்பதை விளக்கி அதை எப்போழுது மீண்டும் திறக்க முடியம் என்பதை கூறுக.

2. Define "Wakf." How is Wakf created and explain the powers of Mutawalli over the Wakf property?

   'வக்ப்' என்பதை வரையறை செய்க. வக்ஃப் என்பது எவ்விதம் உருவாக்கப்படுகிறது மற்றும் வக்ஃப் சொத்தின் மீது முத்தாவல்லிக்கு உள்ள அதிகாரங்களை விவரி.

3. Examine the rules of intestate succession for Indian Christians in India.

   இந்தியாவில் இந்திய கிறித்துவர்களுக்கான உயிலில்லா இறங்குரிமைக்கான விதிகளை ஆராய்க.

## PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain how succession certificate is to be obtained.

   வாரிசு சான்றிதழ் பெறும் முறையினை விவரிக்கவும்

5. Who are the sharers and residuaries under Hanafi Law? Explain.

   ஹனபி சட்டத்தின் கீழ் பங்குதாரர்கள் மற்றும் எச்சதாரர்கள் யாவர்? விளக்குக.

6. Explain the various ways by which a Will can be revoked.

ஒரு உயிலை ரத்து செய்ய உள்ள பல்வேறு வழிமுறைகளை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக:

(a) Doctrine of Cypress

இயன்ற அளவு ஆற்றல் கோட்பாடு

(b) Pious obligation

மதக்கடமை

(c) Donatio mortis causa

மரணத் தருவாயிலானக் கொடை

(d) Obstructed Heritage

தடுக்கப்பட்ட இறங்குரிமை

(e) Executor de son tort

தான் தோன்றி நிறைவேற்றாளர்

(f) Gains of learning

கற்றதினால் பெறப்பட்ட பயன்கள்

(g) Notional Partition

கருத்தியல் பாகப்பிரிவினை

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A Hindu male dies leaving behind his mother, father, brother and the uterine sister. Distribute the estate.

ஒரு இந்து ஆண் தன் தாய், தந்தை, சகோதரன் மற்றும் தாய்வழி சகோதரி ஆகியோரை விட்டுவிட்டு இறந்து விடுகிறான். சொத்தை பங்கிடுக.

9. A Hanafi Muslim bequeaths ¾ of his property to his son and ¼ of his property to his daughter. He is survived by these two children only. The daughter does not consent to the disposition. What are the rights of the daughter?

ஒரு ஹனபி முகமதியர் அவரது சொத்தில் 3/4 பங்கினை தனது மகனுக்கும் 1/4 பங்கினை தனது மகளுக்கும் உயில் மூலம் அளிக்கிறார். இந்த இரண்டு பிள்ளைகள் மட்டும் தான் அவர் இறக்கும் போது இருந்தனர். மகளானவர் அந்த உயில் பங்கீட்டிற்கு ஒப்புக் கொள்ளவில்லை. அந்த மகளின் உரிமைகள் என்ன?

10. A female Christian dies leaving behind her father, 2 sons, a daughter, 2 grand sons through predeceased son and her husband. Distribute the estate.

ஒரு கிறித்துவ பெண் தனது தந்தை, 2 மகன்கள், மகள், முன்னதாக இறந்து விட்ட மகன் வழியான 2 ஆண் பேரக்குழந்தைகள் மற்றும் தனது கணவனை விட்டு இறந்து விடுகிறார். அவரது சொத்தைப் பங்கிடுக.

---